# பயப்படாதே
# சிறுமந்தையே



## வியாக்கியானம்


சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து

## லூக்கா 12:32

**32. பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்.**



# எக்காலத்திலும் தேவனுடைய பிள்ளைகள் சிறுகூட்டமாகவே இருந்து வந்துள்ளனர்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 63-07-14 M முறையிடுகிறது என்ன? சொல்!

125. இப்பொழுது, மோசேயின் கழுகு கண்கள் எகிப்தின் ஆடம்பரத்திற்கு அப்பால் நோக்கின.

126. இன்றுள்ள உண்மையான கிறிஸ் தவ விசுவாசி ஒவ்வொருவனும், சபை என்ன கூறினும், அந்த ஒளி விழும்போது, தேவனுடைய அடையாளங்களை அவன் காணும்போது வேதவாக்கியங்களின் நிறை வேறுதலாக அக்கினி ஸ்தம்பம் நிற்பதை யும், அநேக அடையாளங்கள் அற்புதங்கள் நிகழ்வதையும் அவன் காணும்போது, அது உயிர்பெறுகின்றது. அது எவ்வளவு சிறிய கூட்டமாயிருந்த போதிலும் அவனுக்குக் கவலையில்லை. எக்காலத்திலும் தேவனு டைய பிள்ளைகள் சிறுகூட்டமாகவே

இருந்து வந்துள்ளனர். பாருங்கள்? "பயப்படாதே சிறு மந்தையே உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்'' என்றெல்லவா இயேசு கூறியுள்ளார். பாருங்கள்? உடனே அவர்கள் அதை கிரகித்துக்கொள்கின்றனர். ஒவ்வொரு ஸ்தாபனத்திலுமுள்ள நித்திய ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவர்கள் கண்டுகொள்ள அதை அனுப்பவேண்டியது தேவனுடைய கடமையாகும்

127. நித்திய ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்ட சிமியோன் என்னும் வயோதிபனைக் கவனியுங்கள். குழந்தையின் வடிவிலிருந்த மேசியா, அவருடைய தாயார் அவரைக் கைகளில் ஏந்திக் கொண்டு ஆலயத்திற்குச் சென்ற போது சிமியோன் ஏதோ ஒரு அறையில் படித்துக்கொண்டிருந்தான். அவன் மேசியாவின் வருகைக்காக காத்திருந்தான்.

மேசியா அங்கு வந்திருப்பதை பரிசுத்த ஆவியானவர் அவனுக்கு உணர்த்தினார். அந்த ஜீவன் அவனுக்குள் இருந்தது. அவன், ''கர்த்தருடைய கிறிஸ்துவைக் காணும் முன்பு நான் மரிக்கமாட்டேன்'' என்று திட்டவட்டமாகக் கூறினான். அந்த கர்த்தருடைய கிறிஸ்து ஆலயத்திற்குள் வந்திருந்தார். பணியில் அப்பொழுது ஈடுபட்டிருந்த சிமியோனை பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்தினார். அவன் குழந்தையைக் கையி லெடுத்து, ''உம்முடைய அடியேனை இப்பொழுது சமாதானத்துடன் போக விடும். உமது இரட்சணியத்தை என் கண்கள் கண்டது'' என்றான்.

128. அதுபோன்று அன்னாள் என்னும் வயோதிப, கண் பார்வை இழந்த ஸ்திரீ ஒரு மூலையில் இரவும் பகலும் கர்த்தரை ஆராதித்துக் கொண்டிருந்தாள். அவளும்,

'மேசியா வரப்போகின்றார், அவர் வருகையை, நான் காண்கிறேன்'' என்று முன்னறிவித்திருந்தாள். அவள் கண் பார்வையற்றவளாய் இருந்தாள். அதே நேரத்தில் மேசியா ஆலயத்தை அடைந்த போது, அவர் 'அவர் அங்கிருப்பார், அங்கிருப்பார், அவர் அங்கிருப்பார்,'' என்று வருகையை முன்னறிவித்த அவளுக்குள் இருந்த ஜீவன், “முறை தவறிப் பிறந்த குழந்தை'' என்று கருதப் பட்ட அக்குழந்தை துணிகளினால் சுற்றப் பட்டு ஆலயத்திற்கு கொண்டு வரப்பட்ட போது பரிசுத்த ஆவியானவர் கண் பார்வையற்ற அந்த வயோதிப ஸ்திரீயை உணர்த்தினார். அவள் பரிசுத்த ஆவியினால் வழி நடத்தப்பட்டு, கூட்டத்தினுள் புகுந்து, குழந்தையின் அருகே வந்து, குழந்தையையும் அதன் தாயையும் ஆசீர்வதித்து, அக்குழந்தையின் எதிர்

காலம் என்னவாயிருக்கும் என்று தீர்க்க தரிசனம் உரைத்தாள் பாருங்கள். நித்திய ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவர்கள். பாருங்கள்?

129. அக்காலத்தில் இத்தகையோர் பன்னிரண்டு பேர்கூட இல்லை என்பதைப் பாருங்கள். நோவாவின் காலத்தில் ஏராள மானோர் இருந்தபோதிலும், எட்டு பேர் மாத்திரமே இரட்சிக்கப்பட்டனர். ஆனால் ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவர் அனை வரும் அவரவர் காலத்தில் ஒன்று சேர்க்கப் படுகின்றனர். பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு காலத்திலும் எவ்வாறு கிரியை நடப்பித்து, ஜனங்களைக் கவர்ந்துவிடுகி றார் என்பதைக் கவனியுங்கள்.

130. மோசே கொண்டிருந்த விசுவாசம், இனி நிகழப்போவதைக் கவனிக்க அவனை வழிநடத்தினதேயன்றி, முன்பு

நடந்ததையல்ல. இன்றைக்கு பதிலாக நாளையை நோக்கிப்பார்; அந்த ஆடம் பரத்தை நோக்குவதற்கு பதிலாக வாக்குத் தத்தை நோக்கிப் பார். ஸ்தாபனத்திற்கு பதிலாக ஜனங்களை நோக்கிப் பார். பாருங்கள்? தேவன் அதைச் செய்தார்.

131. எகிப்திலுள்ள அல்லது சோதோ மிலுள்ள செழிப்பை லோத்து கண்டான். அங்கு நிறைய செல்வம் உண்டு என்று அவன் அறிந்து, ஆபிரகாமின் உடன் பிறந்தார் மகனுமாகிய எபிரெயனுமாகிய அவன், செல்வந்தனும் மேதையுமாக வேண்டும் என்னும் எண்ணம் கொண்டு, சோதோமைத் தெரிந்துகொண்டான். லோத் தினுடைய அறிவு செல்வச் செழிப்பைக் காண அவனை வழி நடத்தியது. லோத் தினுடைய ஞானம் பகட்டினால் வரும் நிறைவைக் காண அவனை ஏவியது. ஆனால், அது அவனுடைய விசுவாசத்தை

மிகவுமாக சீர்குலையச் செய்தது. அந்த விதமான வாழ்க்கையை அக்கினி அழிக்கப் போகின்றது என்பதை அவன் காணவில்லை.

132. இன்றுள்ள ஜனங்களும் அதே நிலையில் உள்ளனர். ஒரு பெரிய ஸ்தாபனத்தில் அங்கத்தினராயிருக்கின்ற ஒரு வாய்ப்பைப் பார்க்கின்றனர். நகரத்தில் உள்ள ஜனங்களோடு ஒரு சமூக அந்தஸ்தை கொண்டவர்களாக இருக்கும் ஒரு வாய்ப்பை அவர்கள் பார்க்கின்றனர். ஆனால் அவர்கள்... அதனால் தங்க ளுடைய விசுவாசம் சீர்குலைந்துபோயிருப் பதை அவர்கள் காணத்தவறுகின்றனர். இதை நான் மறுபடியும் வலியுறுத்த விரும்புகிறேன். என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளாமலிருக்க அது உதவி புரியும். இன்றுள்ள பெண்கள், சினிமா நட்சத்திரங்களைப் போல் காணப்பட

நடந்து கொள்ள விரும்புகின்றனர். அவ்வாறே ஆண்களும், டெலிவிஷனில் (தொலைக்காட்சி TV) வரும் கோமாளி களைப் போல் இருக்கவேண்டுமென்று விரும்புகின்றனர்.

133. இன்றைய போதகர்கள் தங்கள் சபைகளை அங்கத்தினரை மாத்திரம் சேர்க்கும் ஒரு நவீன விடுதியாக ஆக்க விரும்புகின்றனர். ஸ்தாபனங்களுடன் இணங்கி போவதன் மூலம் பேராய ராகவோ, அல்லது மேல் கண்காணி யாகவோ ஆக வாய்ப்புண்டு என்று அவர்கள் கருதுகின்றனர். தேவனுடைய வல்லமையினாலும், ஜீவனுள்ள தேவ னுடைய வார்த்தையானது ஜனங்களுக்குள் வாசம் செய்து, வேதவாக்கியங்களை தெளிவாக உறுதிப்படுத்தி, அவர் களுக்கு தேவவாக்கியங்கள் நிரூபிக்கப்பட்டு, அதனுள் முன்பாக வைக்கப்பட்டிருந்தும்,

அவர்கள் அதை நிராகரிக்கின்றனர்; இருந்த போதிலும் அவர்கள் அதை விரும்புவ தில்லை. இது போன்ற காரியங்களில் கலந்து கொள்ள எங்களுக்கு விருப்ப மில்லை'' என்கின்றனர். ஏனெனில் அவ்வாறு செய்தால், அவர்கள் ஐக்கிய சீட்டு ரத்து செய்யப்படும். அவர்கள் ஸ்தாபன ஒழுங்கே ரத்தாகும். ஆனால் இன்னுமாக உத்தமமுள்ள லோத்து சோதோமில் வாழ்வது பாவம் என்பதை உணர்ந்தபோதும், அங்கு வாழ்ந்ததற்கு இது ஒப்பாயுள்ளது. பாருங்கள்? பாருங் கள்? அதன் விளைவால், அவர்களுக்குள் குடிகொண்டுள்ள சிறு விசுவாசமும் கிரியை செய்ய முடியாமல் குலைந்து போய்விடுகின்றது.

134. இப்பொழுது, மோசே அதற்கு பணிந்தான், இன்னுமாக அவன்... அவனு

டைய விசுவாசம், உலகத்தின் டாம்பீகத்தை சீர்குலைத்து விட்டது.

135. ஒன்று, உங்கள் விசுவாசம் ஆடம் பரத்தை சீர்குலைக்கும், அல்லது ஆடம் பரமானது உங்கள் விசுவாசத்தை சீர் குலைத்துப் போடும். இவையிரண்டில் ஏதாவது ஒன்றையே நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும். வேத புஸ்தகம் ஒருபோதும் மாறாது என்பதை நீங்கள் காணுங்கள். தேவன் மாறாதவராயிருக் கிறார். அவர் என்றென்றும் மாறாத தேவன்.



# பத்து லட்சத்தில் ஒருவர்!



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 65-04-18E தேவன் தமது வார்த்தையைப் பற்றின சிந்தையை எப்பொழுதாவது மாற்றுவாரா?

7. அவர் பெரிய குழுவாக இருப்பவர்களுக்காக வருவதில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். இப்பொழுது சிறிய குழுவாக இருப்பதனால், ''பயப்படாதே சிறு மந்தையே, உங்கள் பிதாவின் சித்தம்...'' பாருங்கள்?

8. இந்த ஊழியக்காரரை அபிஷேகம் செய்வதற்கு முன்பு உங்களுக்கு அதிர்ச்சியூட்டும் ஒரு வார்த்தையைக் கூற விரும்புகிறேன். இதை நீங்கள் அறியவேண்டும். இது மிகவும் அதிர்ச்சியூட்டுவதாயிருக்கிறது. இது சரியான ஒரு எண்ணிக்கையாயிருக்கும் என்று நான் கூற எண்ண

வில்லை. அதை நான் உங்களிடமே விட்டுவிடுகின்றேன்.

9. இங்கு யாராவது மிருகங்கள் செயற்கை முறையாக கருவூட்டப்படுவதைக் கண்டிருக்கிறார்களா என்று எனக்குத் தெரியாது. அதை நான் அங்கீகரிப்பதில்லை. ஆனால் அதை நான் கண்டிருக்கிறேன். ஒரு சிறிய குச்சியில் ஆண் மிருகத்தினுடைய விந்தைத் தொட்டு எடுத்து ஒரு சலவைக் கல்லின் மேல் தடவி, அந்த ஒரு சொட்டு விந்தை ஒரு பூதக் கண்ணாடியின் மூலமாக நோக்கினால், (சாதாரணமாக அதைக் காண முடியாது) அந்த ஒரு சொட்டில் 50 அல்லது 100 அணுக்கள் குதித்துக் கொண்டிருப்பதைக் காணலாம். அதேபோல பெண்ணுக்குள் அநேக முட்டைகள் உண்டு, இப்பொழுது இந்த முதல் இரண்டும் ஒன்றுக்கொன்று இணையும்போது....

10. அந்த லட்சக்கணக்கான அணுக்களில் ஒன்றுதான் உயிர் வாழப்போகின்றது. இதைக் குறித்து எப்போதாவது சிந்தித்திருக்கிறீர்களா? இவை அதே விந்தணுக்களும் அதே முட்டைகளும் தான், எல்லாம் ஒன்றாகத்தான் இருக்கின்றன. ஆனால் ஒன்றே ஒன்றுதான் வாழப் போகின்றது. எது முன்னே சென்றடையும் என்றல்ல. ஏனென் றால் சிலசமயம் முட்டையானது, பின்னே செல்லும், அணுவானது விந்துக்களின் நடுவில் சென்றுவிடும், ஒன்றுக்கு மேல் ஒன்று அசைந்துக் கொண்டிருக்கும். ஆனால் பிறக்கப்போவது ஆண் அல்லது பெண்ணா, சிகப்பு அல்லது கறுப்புத் தலையையுடையதா, அல்லது மற்றவை என்று அறிய ஒரு அறிவுத்திறன் தேவையாயிருக்கிறது. அது தேவனுடைய தெரிந்துகொள்ளுதலாய் இருக்கின்றது.

அது வேறொன்றாக இருக்க முடியாது. தெரிந்து கொள்ளுதல்!

11. இயற்கையான பிறப்பிலும் அது தெரிந்து கொள்ளுதலாய் இருக்கின்றது. அது ஆணாய் அல்லது பெண்ணாயிருந் தாலும் சரி, அது என்னவாயிருந்தாலும் சரி. அந்த சிறு விந்தணுவானது அந்த சிறிய முட்டையினுள் ஊர்ந்துச் செல்லும்போது அடிப்பாகம் வளரத்துவங்கும். பின்னர் குழந்தையின் முதுகுத்தண்டு வளரும். மிருகம் அல்லது வேறெதுவாயிருந்தாலும் சரி. ஆனால் மற்ற லட்சக்கணக்கான அணுக்கள். லட்சக்கணக்கான முட்டைகள், லட்சக்கணக்கான விந்தணுக்கள், அதில் ஒன்றுதான் உயிர் வாழ்கின்றது. எல்லாமே ஒன்றுதான். ஆனால் அது வாழவேண்டும் என்று தேவன் தெரிந்து கொள்கிறார். மற்றவையெல்லாம் அழிந்துபோகும். பத்து லட்சத்தில் ஒன்று.

12. எகிப்தை விட்டு வெளியே வந்த இஸ்ரவேலர் எல்லாரும் ஒரே தீர்க்கதரிசி யின் செய்தியைத்தான் விசுவாசித்தார்கள். ஒவ்வொரு வரும் தேவன் மோசேயின் மூலம் செய்த அடையாளங்களைக் கண்டனர். எகிப்தை விட்டு வெளியே வந்த ஒவ்வொருவரும் சிவந்த சமுத்திரத்தினூ டாகக் கடந்து மோசேக்குள்ளாக ஞானஸ் நானம் பண்ணப்பட்டார்கள். மோசே ஆவியினால் பாடினபோதும் மிரியாம் தம்பூரோடும் வாசித்து மேலும் கீழும் கரையில் ஓடினபோது தேவ வல்லமை வந்ததை ஒவ்வொருவரும் கண்டனர். ஒவ்வொரு இரவிலும் வானத்திலிருந்து பெய்த புதிய மன்னாவை ஒவ்வொரு வரும் சாப்பிட்டனர். அடிக்கப்பட்ட கன்மலையின் தண்ணீரை ஒவ்வொருவரும் குடித்தனர். எகிப்தை விட்டு இருபது லட்சம் பேர் வெளியே வந்தனர். ஆனால்

எத்தனை பேர் வாக்குத்தத்தம் பண்ணப் பட்ட தேசத்தை அடைந்தனர்? இரண்டு பேர். பத்து லட்சத்தில் ஒருவர்! மற்றவர் களெல்லாம் எங்கே? இயேசு அவர்கள் மரித்தார்கள் என்று கூறினார். "உங்கள் பிதாக்கள் முப்பது வருட இடை வெளி யில், வனாந்திரத்தில் மன்னாவைப் புசித் தும், அவர்கள் எல்லோரும் மரித்தார்கள் என்று நான் உங்களுக்குக் கூறுகிறேன்,'' என்றார்.

13. இன்றிரவு இவ்வுலகத்தில் கத்தோ லிக்கர், பிராடெஸ்டண்டுகள் உட்பட ஐம்பது கோடி கிறிஸ்தவர்கள் உள்ளனர். இயேசு இப்பொழுது அந்த எடுத்துக் கொள்ளப்படுதலுக்கென்று வந்தாரானால் நான் இப்போது கூறினபடியே இன்றிரவு 500 பேர் காணாமல் போகலாம்.


14. ஓ, கிறிஸ்தவர்களே, நாம் நம்மை கிறிஸ்துவினுடைய கவசத்தோடு பிணைத்துக் கொள்வோம். அவரில் அன்புகூர்ந்து அவரைப் பணிந்து நமக்கு தெரிந்ததையெல்லாம் அவருக்குச் செய்து அந்த மகத்தான சமயத்திற்காக காத்திருப்போம்.

15. ஒரு சந்ததியிலிருந்து திரளான லட்சக்கணக்கான மக்கள் வெளிவந்து அணிவகுத்துச் செல்லப் போவதில்லை. அது முடியவே முடியாது. ஒவ்வொரு நாளும் ஒரு சந்ததியை முற்றுப் பெறச் செய்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். 'நோவாவின் நாட்களில் நடந்தது போல மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும். அன்று ஜலத்தினால் எட்டு ஆத்துமாக்கள் மட்டுமே இரட்சிக்கப் பட்டன. ஆனால் ஒவ்வொரு நாளிலும் யாராவது ஒருவருக்கு நாற்பது வருடங்கள் முடிகின்றது பாருங்கள்? ஒவ்வொரு

நாளும் அனேகர் தேவனுடைய இராஜ் ஜியத்தில் முத்தரிக்கப்படுகின்றனர். ஒரு நாளிலே அந்த கடைசி நாள் வரும். நாம் இப்போது சரியான மனநிலையில் இருக்கும்போதே நிச்சயமுடையவர்களாய் இருப்போம். சபையிலே, மக்கள் மத்தி யிலே, பரிசுத்த ஆவியானவர் நம் மத்தியில் தம்மைத்தாமே அடையாளங் காண்பித்து ஒருமுகப்படுத்துகிறார். ஆதலால் எல்லாம் சரியாயிருக்கிறது என்று நிச்சயித்து அவருக்கு முன்பாக சரியா யிருப்போம்.

16. உயிர்ப்பிக்கும் வல்லமையானது உங்களை உலகத்தின் காரியங்களிலிருந்து வேறுபிரித்து, தேவனுடைய இராஜ்ஜியத் தில் சேர்க்கும் வரை இரவும் பகலும் ஓயாமல் அதைத் தொடருங்கள். ஒரு போதும் நில்லாதேயுங்கள். உண்மை யாகவே தேவனுடைய இராஜ் ஜியத்தில்

கொண்டு வரப்பட்டு, தேவனுடைய ஆவியால் உயிர்ப்பிக்கப்பட்டிருப்பவர்களே, உங்களுக்கு அது எப்படிப்பட்ட ஒரு சந்தோஷம்! நாம் இரவும் பகலும் முழங்காலில் நின்று ஆனந்தக் கண்ணீர் வடித்து தேவன் செய்த எல்லாவற்றிற்கும் நன்றி செலுத்த வேண்டும்.



# தேவனுடைய சபையானது இயேசுவானவர் வரும் வரைக்குமாய் எப்பொழுதுமே சிறுபான்மையாகவே இருந்து கொண்டிருக்கும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: 57-01-20E தேவன் தம்முடைய வார்த்தையைக் காத்துக்கொள்கிறார்

110. **தேவனுடைய சபையானது இயேசு வானவர் வரும் வரைக்குமாய் எப்பொழுதுமே சிறுபான்மையாகவே இருந்து கொண்டிருக்கும்.**

"பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு இராஜ்ஜியத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார். அது உண்மை.

**நாம் குறைவானவர்களாய் இருக்கிறோம். ஆனால் அதெல்லாம் சரி. தேவன் அங்கே இருக்கும் வரைக்கும், அது எனக்கு பெருவாரியாகவே இன்னமும் இருக்கிறது.** அது உங்களுக்கும் அப்படித்தான் இருக்கும் என்பதை நான் அறிவேன்.

“ஏனென்றால் தேவன் உங்கள் பட்சத்தில் இருந்தால் உங்களுக்கு விரோதமாய் இருப்பவன் யார்?”



# ஏன் சிறிய பெத்லகேம்?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 58-1228 — ஏன் சிறிய பெத்லகேம்?

எனவே இன்றைக்கு நான் *ஏன் சிறிய பெத்லகேம்?* என்ற பொருளைக் குறித்துப் பேசலாம் என்று எண்ணினேன்.

27 சிறிய தீர்க்கதரிசிகளில் ஒருவரான தீர்க்கதரிசி மீகாவின் புத்தகம் 5-ம் அதிகாரம் 2-ம் வசனத்திலிருந்து நான் வாசிக்க விரும்புகிறேன். அது இந்தவிதமாக வாசிக்கப்படுகிறது.

*எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்;*

*அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது.*

28 அங்கே அந்த வேதவாக்கியத்தின் மீது ஒரு புள்ளி இருந்தபடியால், அது என்ன வார்த்தையாயிருந்தது என்பதை அந்த நேரத்தில் சரியாக வாசிக்க முடியவில்லை.

29 பாலஸ்தீனாவில் உள்ள எல்லா இடங்களைக் குறித்தும் ஒவ்வொன்று உண்டு. அங்கே அநேக மிகப் பெரிய பட்டணங்களும், அதினுடைய ஸ்தலங்களும், வரலாற்று சிறப்பில் அதிகமாய் அறியப்படுகின்ற பட்டணங்களும், சிறந்த அரணிப்பாக்கப்பட்ட பட்டணங்களும் உள்ளன. அப்படியிருந்தும் ஏன் தேவன் தம்முடைய குமாரனின் பிறப்பிடமாயிருக்கும்படிக்கு சிறிய பெத்லகேமைத் தெரிந்து கொள்ள வேண்டும்? அங்கே அநேக

மகத்தான பட்டணங்கள் உண்டே. உதார ணமாக, சரித்திர புகழ்பெற்ற எருசலேம், பெருமைக்குரிய எருசலேமே அவை எல்லாவற்றிற்கும் தலைநகரமாய் உள்ளது. அது பாலஸ்தீனாவில் உள்ள மிகப்பெரிய பட்டிணங்களில் ஒன்றாகும். அப்படியிருக் கையில் ஏன் தேவன் தம்முடைய குமாரனின் பிறப்பிடமாக அந்த சிறிய பெத்லகேம் பட்டணத்தை தெரிந்தெடுக்க வேண்டும் என்று நாம் வியப்படைகி றோம்.

30 ஆனால் வேத வாக்கியங்களோ, “தேவன் எதைச் செய்யும்படி தீர்மானிக் கிறாரோ, அதுவே செய்யப்படும்” என்று உரைத்துள்ளன. தேவன் அது அந்த விதமாய் இருக்க வேண்டும் என்று முன்நியமித்திருந்தார், இல்லையென்றால் அது ஒருபோதும் அந்தவிதமாக இருந் திருக்காது. அப்போஸ்தலர் 15-ம் அதிகா

ரத்தில் வேத வாக்கியமானது, “எந்த காரியமும் தற்செயலானதல்ல” என்று கூறுகிறது. தேவன் ஒவ்வொரு காரியத்தையும் அறிந்திருந்தார். இல்லையென்றால் அது அந்தவிதமாய் சம்பவித்திருக்காது. தேவன் அதை அந்தவிதமாக உண்டு பண்ணினார்.

31 அதன்பின்னர் நாம் நம்முடைய குறிப்பிட்ட குறுகிய சிந்தையில், “பரலோகத்தின் மகத்தான இராஜாவானவர் தலை நகரத்தைத் தெரிந்து கொள்வதற்குப் பதிலாக ஏன் இதைப் போன்ற ஒரு சிறிய இடத்தைத் தெரிந்து கொண்டார்?” என்று சிந்திக்க துவங்குகிறோம். ஏதோ ஒன்றிற்கு பதிலாக...

32 பெத்லகேமில் செய்யப்பட்டதைப் பார்க்கிலும் மகத்தான ஆவிக்குரிய பின்னணியைக் கொண்டிருந்த அநேக ஸ்தலங்களும்கூட இருந்தன. உதாரணமாக

சீலோவைப் போன்ற சில இடங்கள், சீலோ இஸ்ரவேலரின் பண்டைய ஆராதனை ஸ்தலமாக இருந்தது. அங்கே எல்லோரும் வருடா வருடம் வருவார்கள்...இந்த மகத் தான இடத்தில் கர்த்தருடைய உடன்படிக் கைப் பெட்டியும் தங்கியிருந்தது. அப்படி யானால் ஏன் அவர் சீலோவில் பிறக்க வேண்டும் என்று விரும்பவில்லை என்று வியப்படைகிறோம்.

33 அதன்பின்னர் அங்கே கில்கால் இருந்தது. அது ஆவிக்குரிய மற்றொரு மகத்தான ஆராதனை ஸ்தலமாயிருந்தது. அப்படியானால் தேவன் ஏன் அவரை கில்காலில் பிறப்பிக்கும்படி அனுமதிக்க வில்லை?

34 அங்கே மற்றொன்று சீயோன் இருந்தது. சீயோன் மலையின் உச்சியில் இருந்தது. அப்படியானால் இயேசுவான

வர் ஏன் சீயோனில் பிறக்கவில்லையென்று நாம் வியப்படைகின்றோம். ஏனென்றால் அது கர்த்தர் தம்முடைய ஜனங்களை காலங்கள் தோறும் ஆசீர்வதித்திருக்கிற ஒரு மகத்தான சரித்திரப்பிரகாரமான அடையாளச் சின்னமாகவே இருந்து வருகிறது.

35 அவர் சீயோனை அல்லது கில்காலை அல்லது—அல்லது சீலோவை அல்லது மகத்தான ஆசீர்வாதங்களையும், மகத்தான போதனைகளையும் உடையதாயிருந்து வந்த மற்ற மகத்தான ஸ்தலங்களில் ஒன்றை தெரிந்து கொண்டிருக்கலாம் என்பது போல் காணப்படலாம்.

36 அங்கே எபிரோன் போன்ற பட்டணங்களும் இருந்தன. அது ஒரு மனிதனுக்கு வேண்டியதாயிருந்த ஒரு அடைக்கலப் பட்டணமாய், ஒரு பாது

காப்பு ஸ்தலமாய் இருந்தது. அங்கே ராமோத்—கிலேயாத் என்ற மற்றொரு அடைக்கல ஸ்தலமும்கூட இருந்தது. அங்கும் ஜனங்கள் வருவார்கள். அது அவர் பிறப்பதற்கான மிகப் பொருத்தமான இடமாய் இருந்திருக்கும்.

37 ஒருக்கால் நான் அதை சிந்தித்துக் கொண்டிருந்திருந்தால், நான் அவரை காதேஸ்பர்னேயாவிற்கு கொண்டு வந்தி ருப்பேன், ஏனென்றால் அது நியாயத்தீர்ப் பின் ஆசனமாயும், மற்றும் ஒரு அடைக்கல ஸ்தலமாகவும் இருந்தது. ஒருவேளை நான் அவருடைய பிறப்பிடமாயிருப்பதற்காக அவரை அந்த தேசத்திற்கு கொண்டு வந்திருப்பேன். இல்லையென்றால் நாம் ஒருக்கால் வேறெந்த பட்டணங்களில் ஒன் றையாவது தெரிந்து கொண்டிருப்போம்.

38 ஆனால் உங்களுக்குத் தெரியும், வேதாகமத்தில் வெறுமனே சிறிய முக்கிய மேயில்லாத காரியங்களும்கூட மிகப் பெரிதான பொருளைக் கொண்டுள்ளது என்பதற்காக நான் மிகவும் சந்தோஷப் படுகிறேன். அது இயேசுவானவர் கூறினதான இருந்தது என்றே நான் நினைக்கிறேன். அதாவது, “நீங்கள் நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளை விட்டுவிடுகிறீர்கள். சரியாகக் கூறினால், சிறிய காரியங்களை விட்டு விடுகிறீர்கள்” என்பதேயாகும். ஆனால் சில நேரங்களில் சிறிய காரியங் களே பெரிய காரியங்களை ஒன்று சேர்ந்து பிடித்துக் கொள்கின்றதாயிருக்கின்றன. ஆனால் எல்லாவற்றிலும் எல்லாமுமான அந்த பெரிய பற்சக்கரங்கள் இங்கே தேவன் அவைகளை நியமித்தவிதமாக சுழன்று கொண்டிருக்கின்றன். அவைகளில்

ஒன்றுகூட ஒருபோதும் அதினுடைய ஸ்தானத்தைவிட்டு அகலாது. தேவன் எல்லா காரியங்களையும் முன்நியமித் திருக்கிறார். அது சரியாக அந்த இடத்தை அடைய வேண்டும்.

39 நாம் அதைப் போன்ற விசுவாசத் தைப் பெற்றுக் கொள்ளும்போது, “இவை எல்லாவற்றிற்கும் பின்னால் யார் இருக்கிறது? இந்த தேவனுடைய மகத்தான பிரமாண ஒழுங்கு முறைத்திட்டத்தில் சுழன்று கொண்டிருக்கிற முக்கிய சுருள் கம்பி எது?” என்பதைக் குறித்து நாம் சிந்திக்கத் துவங்குகிறோம். அது பரிசுத்த ஆவி என்பதை நாம் கண்டறிகிறோம். இந்த காரியங்களை செய்யும்படி, அவை மனிதனுடைய கரங்களில் விடப்பட வில்லை. ஆனால் பரிசுத்த ஆவியான வரின் கரங்களிலே விடப்பட்டுள்ளது. அவரே அந்த முக்கிய சுருள் கம்பியாய்

இருக்கிறபடியால், அவர் மற்ற கருவியின் மற்ற பாகங்களை இயக்குவாரானால், அப்பொழுது அவை அப்படியே பரிபூரண மாக செயல்பட்டு, சரியான தேவனுடைய நேரத்தைக் காத்துக் கொள்ளும்.

40 ஆகையால் நாம் அதை காண்கி றோம். நாம் மகத்தான காரியங்களை நோக்கிப் பார்க்கையில், எப்படி நாம் அவைகளை பெற்றுக்கொள்வோம் என்று நம்முடைய சிந்தையில் நாம் வியப்படை கிறோம். ஆகவே அது நமக்கு இன்றைக்கு மிகுந்த ஆறுதலை அளிக்கிறது. அதை நினைத்துப் பார்க்கையில் நாம் ஒரு சிறுகூட்ட ஜனங்களாயிருக்கலாம். நாம் உலகத்திற்கும், பெரிய ஸ்தாபன சபைக ளுக்கும் முக்கியத்துவமில்லாதவர்களா யிருக்கலாம். அதே சமயத்தில் தேவன் அந்த சிறிய, எளிமையான காரியங்களை சில நேரங்களில் உபயோகிக்கிறார்.

41 அது, “பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்” என்று கூட வேத வாக்கியங்களில் எழுதப்பட்டிருக்கிறது. என்னே ஒரு ஆறுதல்! பிதா வானவர் அந்த சிறுமந்தைக்கு இராஜ்யத்தை கொடுக்கும்படியாகவே இயேசு வானவர் அந்த சிறிய பெத்லகமில் பிறக்க வேண்டியது அவ்வளவு நிச்சயமாயிருந்தது என்பதை நான் அறிந்து கொண்டேன். ஏனென்றால் அது எழுதப்பட்டிருக்கிறதே. வேத வாக்கியங்களெல்லாம் வேத ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. வேத வாக்கியங்கள் தவறிப் போகமுடியாது. அவைகள் நிறைவேற வேண்டும். ஆகையால் இராஜ்யத்தை பெற்றுக்கொள்ளப் போவது ஒரு சிறுமந்தை. ஒரு உண்மையுள்ள விசுவாசிகளின் சிறுகூட்டமாயிருக்கும் என்பதை அறியும்போது அது நமக்கு

நம்பிக்கையை அளிக்கிறது. நான் அந்த சிறு மந்தையில் அல்லது அந்த மந்தையில் உள்ளவர்களில் ஒருவனாயிருக்க வேண்டும் என்று நம்பிக் கொண்டிருக்கிறேன். நான் அவ்வாறே கூறவேண்டும்.



# தேவனுடைய வார்த்தையை முழுவதுமாக விசுவாசிக்கின்ற அந்தச் சிறு சபையானது சரியாக இப்பொழுது சிறுபான்மையானதாக இருக்கின்றது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 62-04-01 விசுவாசமும் அதற்கெதிரான அறிவுக்கூர்மையும்

சகரியா 4 : 6ல் இங்கே இப்பொழுது இன்றிரவு நான் முடிக்கப்போகின்றேன். "பராக்கிரமத்தினாலும் அல்ல, பலத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலே ஆகும்", என்று கர்த்தர் சொல்லுகிறார். அறிவுக் கூர்மையினாலும் அல்ல, அறிவினால் அல்ல. ஸ்தாபனங்களால் அல்ல. ஆனால் என்னுடைய ஆவியைக் கொண்டு நான் என்ன செய்வேன்? என்னுடைய வார்த்தையை நான் ஊக்கமூட்டுவேன்," என்று வேதாகமம் கூறுகின்றது.

431. சீஷர்கள் வார்த்தையைத் தங்களுக்குள்ளாக விதைத்துக் கொண்டனர். அப்பொழுது பரிசுத்த ஆவி வார்த்தையை

ஊக்கப்படுத்த வந்தது. பாருங்கள்? 'பராக் கிரமத்தினாலும் அல்ல, இதனால் அல்ல, அதனால் அல்ல, அறிவுக்கூர்மையினால் அல்ல, புரிந்து கொள்ளுதலினால் அல்ல, இதனால் அல்ல, அதனால் அல்ல, ஆனால் என்னுடைய ஆவியினால் என்னுடைய வார்த்தையை ஊக்கமூட்டுவேன். என்னு டைய ஆவியினால் தான் என்று கர்த்தர் சொல்லுகிறார்." விசுவாச வார்த்தையின் தண்ணீர் தான் தேவனுடைய வார்த்தையை ஊக்கமூட்டி அது கிரியை செய்யும்படிக்குச் செய்யும்.

432. எது ஜெயிக்கும்? இப்பொழுது அறிவுக்கூர்மைதான் கிரியைச் செய்யப் போகிறது போலத் தோன்றும்; ஆனால் அது கிரியைச் செய்யாது; அது கிரியைச் செய்யாது. தேவனுடைய வார்த்தையை முழுவதுமாக விசுவாசிக்கின்ற அந்தச் சிறு

சபையானது சரியாக இப்பொழுது சிறுபான்மையானதாக இருக்கின்றது. ஆனால் அதைக்குறித்து கவலைக் கொள்ளாதீர்கள். ''பயப்படாதே சிறு மந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா சித்தமுள்ளவ ராயிருக்கிறார்,'' என்று வேதம் கூறுகின்றது. அது சரி, பாருங்கள்? பயப்படாதீர்கள், விசுவாசத்தில் அப்படியே நிலைத்திருங் கள். வார்த்தையோடு அப்படியே சரியாக தரித்து நில்லுங்கள். வார்த்தையை விட்டு விடாதீர்கள். வார்த்தையோடு தரித்து நில்லுங்கள்.

**நீங்கள் சபைகளின் ஐக்கியத்தை சார்ந்தவர்களாக இல்லாவிழல் உங்களால் சபைக்கு போக முழயாது என்கிற நிலை வரும்.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 58-12-21E ஒரே சபையில் ஒரே தேவனுடைய ஐக்கியம்

41. கத்தோலிக்கமும், கத்தோலிக்க சபையும் எல்லா நபரையும் கத்தோலிக்கர் களாக மாற்ற முயற்சித்துக் கொண்டிருக் கிறதைக் குறித்து நீங்கள் சிந்தித்ததுண்டா? அது கிரியை செய்யாது. அது மனிதனால் உண்டாக்கப்பட்ட செயல்முறை திட்டத்தின் (man-made program) கீழாக இருக்கிறது.

42. பிராட்டஸ்டெண்டு சபையானது சபைகளின் கூட்டமைப்பின் கீழாக இருந்து கொண்டு இந்த எல்லா சிறிய சபைகளை யும் வெளியே தள்ள முயற்சித்துக் கொண் டிருக்கிறதைக் குறித்து எப்பொழுதாவது நீங்கள் சிந்தித்ததுண்டா?

**நீங்கள் சபைகளின் ஐக்கியத்தை சார்ந்தவர்களாக இல்லாவிடில் உங்களால் சபைக்கு போக முடியாது என்கிற நிலை வரும்.**

**பின்பு இதுபோன்றுள்ள சிறிய இடங்கள் அதற்காக நிச்சயம் கிரயம் செலுத்த வேண்டியிருக்கும்.**

**ஆனால், “பயப்படாதே சிறு மந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தை கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்" என்று கூறுகிற ஒரு வேதவாக்கியம் நமக்கு இருக்கிறது.** அதற்காகவே நாம் காத்திருக்கிறோம்.


எனவே மிகவும் பெரிதான ஒன்றை
எதிர்பார்த்திருக்க வேண்டாம்.
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 62-0128M அவிசுவாசம் தேவனை தடை செய்யாது

55. அவிசுவாசம் அவரை நிறுத்த முடியவில்லை. அவர் தொடர்ந்து முன்னேறிப் போய்க் கொண்டிருந்தார். அவர் வியாதியஸ்தர்களை சுகப்படுத்தி, மரித்தோரை உயிரோடே எழுப்பி, குஷ்டரோகிகளை சுத்தமாக்கி, தொடர்ந்து முன்னே போய்க் கொண்டிருந்தார். அப்படிப்பட்ட காரியங்கள் நடக்கும் என்று விசுவாசியாமல் இருந்தபோது..... அவர்களுடைய அவிசுவாசம் இயேசுவை ஒருபோதும் நிறுத்த முடியவில்லை. அவர் என்ன செய்ய வேண்டுமோ அதை அவர் செய்தபடி தொடர்ந்து முன்னே போய்க் கொண்டிருந்தார். அது ஒரு துளிகூட அவரைத் தொல்லைப்படுத்தவில்லை.

**இப்பொழுது அவிசுவாசிகள் இருந்தாக வேண்டும். தேவன் அதை முன் உரைத் திருக்கிறார். எனவே அது ஒரு விசுவாசிக்கு பத்து அவிசுவாசிகள் என்ற விகிதத்தில் இருப்பார்கள். அதற்கு மேலும் இருக்கலாம், ஆயிரத்துக்கு ஒன்று என்ற விகிதத்திலும் இருக்கலாம், காரணம் சபையானது எண்ணிக் கையில் சிறுபான்மையாக இருக்கும்.**

**சிறு மந்தையே பயப்படாதே, உமக்கு இராஜ்ஜியத்தை கொடுக்க வேண்டும் என்பது உம்முடைய பிதாவின் பிரியமான சித்தமாயிருக்கிறது. எனவே மிகவும் பெரிதான ஒன்றை எதிர்பார்த்திருக்க வேண்டாம்.**

பிசாசு எப்பொழுதும் ஒரு பெரிதான ஒன்றை நோக்கியே செல்வான், ஆனால் தேவனோ தன்னை எளிமையாக (சிறுமை யாக) வைத்துக் கொள்கிறார்.

யெகோவா தேவன் அங்கே தொழுவத் தில் ஒரு குழந்தையாக கிடத்தப்பட்டு

அழுது கொண்டிருந்தார். யெகோவா ஒரு இளமையான பையனாக விளையாடிக் கொண்டிருப்பதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? அவர் தேவனாக இருந்தார். தேவன் அவருக்குள் இருந்தார். அது சரியே. அவர் தேவனை வெளிப்படுத்தும்படிக்கு வந்தார். தேவன் கிறிஸ்துவுக்குள்ளாக இருந்து உலகத்தை தனக்குத்தானே ஒப்புரவாக்கிக் கொண் டிருந்தார்.

56. எனவே இதை நாம் கவனிப் போம்... அது பெரிய அளவில் நடத்தப் படும் ஒரு கூட்டம் என்று அழைக்கும் அளவுக்கு காய்பா பெரிய கூட்டத்தை சேர்த்திருக்கலாம்.

சில சமயம் இது போன்ற ஒரு சாதாரண சிறிய சபையைக் கொண்டிருக்கும் மேய்ப் பர்களுக்கு, சில சமயம் இவ்விதமான எண்ணம் தோன்றலாம். எப்படியெனில், “நான் பில்லி கிரஹாம், ஓரல் ராபர்ட்ஸ்,

இன்னும் அது போன்றவர்கள் அளவுக்கு இல்லாததினால், ஒருவேளை தேவன் என்னை நேசிக்காமல் இருக்கலாம்'', என்று கவனியுங்கள், அதை நீங்கள் ஒருபோதும் விசுவாசிக்க வேண்டாம்.

நான் பெற்றுக் கொண்ட மிகவும் வல்லமையான கூட்டங்களில், மிகவும் சிறிய சபைகளிலும், சில சமயம் எங்கோ ஒரு வீட்டில் ஏழு அல்லது எட்டு பேராக நாங்கள் கூடி ஜெபித்துக் கொண்டிருந்த போது, நடந்தது பாருங்கள், தேவன் கூடிவரும்படிக்கு வாக்குத்தத்தம்...

**சபை எவ்வளவு சிறிதாக இருந்தாலும் அது காரியமல்ல, அவர் நம்மோடு கூட இருப்பேன் என்று வாக்குத்தத்தம் செய் திருக்கிறார்.**

“எங்கே என் நாமத்தினால் இரண்டு அல்லது மூன்று பேர் கூடுகிறார்களோ, அவர்கள் மத்தியில் இருப்பேன் என்று.

அவன் அந்த சிறு மந்தையைத் தவிர மற்ற அனைவராலும் புறக்கணிக்கப்பட வேண்டும்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 61-1112 கண்டும் காணாதது போல் விடப்படுகிற ஒரு உண்மையான அடையாளம்

118. ஞாபகம் கொள்ளுங்கள், ஸ்திரீ கள் அவ்விதம் நடந்துகொள்ளத் தொடங் கின போது... அவர்கள் தலை மயிரைக் கத்தரித்துக் கொண்டு அவ்விதம் நடந்து கொள்ளத் தொடங்கின காலத்துக்கு நாம் சற்று செல்வோம். ஸ்திரீகள் அவ்விதம் நடந்துகொள்ளத் தொடங்கும் காலத்தில் தான், எலியா முடிவு கால அடையாளத் துடன் கடைசி நாட்களில் தோன்றுவான் - லோத்தின் நாட்களில் நடந்தது போல். பாருங்கள்? முடிவு கால அடையாளம்... ஸ்திரீகள் அவ்விதம் நடந்துகொள்ளத் தொடங்கும் போது...

அவர்கள் அவ்விதம் இப்பொழுது நடந்து கொள்கிறார்கள். அந்த நேரத்தில்

தான் எலியா காட்சியில் தோன்றி, தேவனுடைய அடையாளத்தைப் பெற்றவனாய், எல்லாவிடங்களையும் சுத்தம் செய்து அழைத்து, கடிந்து கொண்டு, கிழித்தெறிய வேண்டும் (உண்மை!).

**அவன் ஒரு பெரிய கூட்டம் ஜனத்தை அழைக்கப் போவதில்லை. பயப்படாதே, சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார் என்று வேதம் கூறுகிறது (லூக். 12:32).**

பாருங்கள்? அது உண்மை. அது முற்றிலும் உண்மை! **அவன் அந்த சிறு மந்தையைத் தவிர மற்ற அனைவராலும் புறக்கணிக்கப்பட வேண்டும்.** ஏனெனில், எழுநூறு பேரைக் கொண்டிருந்த எலியாவைப் போலவும் சிறுமந்தையைக் கொண்டிருந்த யோவானைப் போலவும் அவன் இருப்பான். ஆம்!

# அந்த நேரம் வரும்போது மிக மிக சொற்பமானவர்கள் மட்டுமே ஆயத்தமாய் இருப்பார்கள் என்று எங்களுக்கு எச்சரித்திருக்கிறீர்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 61-1119 பரிபூரண பலவீனத்தினால் விளங்கும் பரிபூரண பலம்

145. ஒரே ஒரு காரியம் விடப்பட்டிருக்கிறதை நான் காண்கிறேன் பிதாவே. அது, சில வெறும் பாத்திரங்களை நீர் எங்காவது எழுப்பி இந்த உலகம் தன்னைக் குறித்து அவமானப்படச் செய்யும் அல்லது இயேசு கிறிஸ்துவின் வருகையை துரிதமாக்கும் என்பதே.

இரண்டு காரியம் விடப்பட்டிருக்கிறது கர்த்தாவே, நாங்கள் அதை இப்பொழுதே பார்த்தாக வேண்டும். ஏனெனில் இது கடைசி காலம் என்பதை நாங்கள் அறிகிறோம்.

ஒன்று, இப்பொழுதே வல்லமையான ஒன்று எழும்புவதைக் காணச் செய்யும் அல்லது கர்த்தரின் வருகையை நாங்கள் காணச் செய்யும்.

எல்லா தீர்க்கதரிசனங்களும் நிறை வேறிவிட்டன. சபை உயிர்த்தெழுவதற்கு முன்பு வெளிப்படுத்தின விசேஷம்: 3-ம் அதிகாரத்தில் குறிப்பிட்டபடி சபை எடுக்கப்படும் முன்பு, லவோதிக்கேயா சபைக்கு ஒரு தூதன் அனுப்பப்பட்டு, பிள்ளைகளின் இருதயத்தை அவர்கள் முற்கால பிதாக்களிடத்திற்குத் திருப்பும் ஊழியமானது அவர்களை பெந்தெ கொஸ்தேயின் அனுபவத்திற்குள் கொண் டுச் செல்லும்.

**நோவாவின் நாட்களில் நடந்தது போல ஆயிரமாயிரமான ஆத்துமாக்கள் இழக்கப் பட்டு போவார்கள். கர்த்தாவே அனேகர்**

**இழக்கப்படுவார்கள்.** பிதாவே அது ஏற்கனவே நிறைவேறிவிட்டது என்பதை காண்கிறோம்.

146. கர்த்தராகிய இயேசுவே உம்முடைய சபையை எடுத்துக் கொள்ள வாரும்.

**உமக்கு சித்தமானால் கர்த்தாவே, சபை எடுக்கப்படுவதற்கு சற்று முன்பதாக உம்முடைய வல்லமையை எழுப்பட்டும்.**

**ஓ, தேவனே, இந்த பாத்திரங்களை நிரப்பும், எழுப்பும் கர்த்தாவே.**

**இந்த உலகத்தை இன்னும் ஒரு விசை அசையும் !**

**காலம் கடந்துவிட்டது என்று எங்களுக்குத் தெரியும். இனி மனந்திரும்புதல் இருக்காது. அப்படியானால் இது அவர்களுக்கு மிகவும் காலம் கடந்துவிட்டதாயிருக்கும்.**

**ஆனால் கர்த்தாவே உம்முடைய வல்லமையை காண்பியும். இந்த பாத்திரங்களை நிரப்பி முன்பு ஒருபோதும் இருந்திரா வண்ணம் இந்த உலகை அசையும் !**

**அதன் பின்பு உம்முடைய சபையை எடுத்துக் கொண்டு இந்த உலகை அழிவிற்கு விட்டுவிடும். ஓ, தேவனே, அவர்கள் தத்தளிப்பார்கள்.**

அதன் பின்பு மகத்தான பரிசுத்த ஆவியானவர் யூதர்களிடம் வருவார் என்று நாங்கள் அறிந்திருக்கிறோம். 1,44,000 பேர் ஆட்டுக்குட்டியானவருடன் சீனாய் மலையின் மேல் நிற்பதை காண முடிகிறது. அச்சமயம் மணவாட்டி பரலோகத்தில் இருப்பாள். ஆட்டுக் குட்டியானவர் திரும்பவும் வந்து (யோசேப்பு) தம்முடைய ஜனங்களுக்கு தம்மை தெரியப் படுத்துகிறார். அந்நாட்களில் அவர் அங்கு

நிற்கும்போது அங்கு அவர்கள் மத்தியில் ஒரு புலம்பல் உண்டாயிருக்கும் என்று வேதம் கூறுகிறது. அவர் தம்மை தெரியப்படுத்தும் போது அவர்கள், “உம் கையில் இருக்கும் இந்த வடுக்கள் ஏது?” என்று கேட்பார்கள். அதற்கு அவர், “என் சிநேகிதனின் வீட்டிலே காயப்பட்டதினால் உண்டானவைகள்” என்பார், என்று வேதம் கூறுகிறது. அப்பொழுது அவர்கள், “இவ ரைத்தான் நாம் சிலுவையிலறைந்தோம்” என்பார்கள். யோசேப்பு கூறியது போன்று அவரும், “கவலைக் கொள்ளாதீர்கள், ஏனெனில் புறஜாதியாரின் ஜீவனைக் காப்பதற்காக தேவன் இதை செய்தார். இது உங்களுடைய தப்பிதமல்ல” என்று கூறுவார். அதன் பின்பு ஒருவன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறது போல அழுது

புலம்புவார்கள். வம்சம், வம்சமாக புலம்புவார்கள்.

147. ஓ, பிதாவே, அந்த நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அதுதான் 70 வாரங்களின் முடிவாயிருக்கிறது. நேரம் வெகு விரைவிலிருக்கிறது, கர்த்தாவே.

**ஓ, தேவனே, நவநாகரீக சபை வேத சாஸ்திரம் என்னப்பட்ட இந்த நவநாகரீக ஸ்திரீக்கு விரோதமாக உண்மையான தீர்க்க தரிசிகளின் சத்தம் கூக்குரலிட்டும்... சத்தி யத்தைக் கூற பயப்படும், இந்த பிரசங்கி களை அசையும் ஓ தேவனே, இதுவரை இருந்திராவண்ணம் இந்த மனிதர்களை எடுத்து அசைத்து தங்களைக் குறித்து அவமானமடையச் செய்யும்.**

ஆனால் ஒரு காரியத்தை அறிந்திருக் கிறோம். அதின் மேல் நாங்கள் இளைப் பாறி முழு நம்பிக்கையாயிருக்கிறோம்.

அது, “என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்” என்பதே (யோ: 6:44). நீர் எந்த அளவிற்கு நெருங்க வேண்டுமென்று விரும்புகிறீரோ அந்த அளவிற்கு அவர்கள் நெருங்குவார்கள்.

**ஆனால், “பயப்படாதே சிறு மந்தையே, உங்களுக்கு இராஜ்ஜியத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்” (லூக். 12:32) என்று கூறினார். அது உண்மையென்று நாங்கள் அறிவோம்.**

**அந்த நேரம் வரும்போது மிக மிக சொற்பமானவர்கள் மட்டுமே ஆயத்தமாய் இருப்பார்கள் என்று எங்களுக்கு எச்சரித்திருக்கிறீர்.**

பின்பு எல்லாக் காலங்களிலும் மீட்கப் பட்டவர்கள் - உயிர்த்தெழுந்து வருவார் கள் என அறிகிறோம்.

ஆகவே பிதாவே, இவைகளை நாங் கள் பார்த்து, இந்நாட்களின் செய்தியையும் காண்கிறோம். இன்றுள்ள புறக்கணித்தலை யும் ஒத்துழையாமையும் நாங்கள் காண்கி றோம்.

**உம்முடைய ஜனங்கள் தங்களை, "ஒன்றுமில்லை" என்று அறிக்கையிடுவதை காண்கிறோம்.**

**கர்த்தாவே, அவர்கள் உம்மால் நிரப்பப்பட விரும்புகிறார்கள். அவர்களைக் கொண்டு கர்த்தர் வருவதற்கு சற்று முன்பு இந்த உலகத்தை அசையும் என்று ஜெபிக் கிறேன்.**



# பயப்படாதே சிறுமந்தையே

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து